Nestlé Good food, Good life

# பத்திரிகை வெளியீடு

கொழும்பு, 28 மார்ச் 2022

## *Nescafé* மற்றும் *Maggi* ஆகியன SLIM-KANTAR People's Awards 2022 விருதுகள் நிகழ்வில் இலங்கை நுகர்வோரின் அபிமானத்தை வென்றுள்ளன

நெஸ்லே தயாரிப்புகளை இலங்கை மக்கள் எந்தளவுக்கு நேசிக்கின்றனர் என்பதை மீண்டும் உறுதிப்படுத்தியவாறு, SLIM-KANTAR People's Awards 2022 விருதுகள் நிகழ்வில் People's Hot Beverage Brand of the Year (மக்களின் அபிமானம் பெற்ற வர்த்தகநாமம் - சூடான பான வகை) ஆக *Nescafé* மற்றும் People's Snack Brand of the Year (மக்களின் அபிமானம் பெற்ற வர்த்தகநாமம் - சிற்றுண்டி வர்த்தகநாமம்) ஆக *Maggi* ஆகியன அமோக வாக்குக்களைப் பெற்றுள்ளன. இலங்கை சந்தைப்படுத்தல் கற்கை நிலையத்தால் (SLIM) தொடர்ச்சியாக 16 ஆவது வருடமாக ஏற்பாடு செய்யப்பட்ட மக்கள் விருதுகள் 2022 (People's Awards 2022) நிகழ்வானது 'Heart Share' எனும் தொனிப்பொருளின் கீழ் இலங்கை நுகர்வோர் வர்த்தகநாமங்கள் மற்றும் தனிநபர் ஆளுமைகளுடன் கொண்டிருக்கும் உணர்வுபூர்வமான பிணைப்புக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

"ஆரம்பத்திலிருந்தே, நாங்கள் முன்னெடுக்கின்ற அனைத்து செயல்பாடுகளிலும் எங்கள் நுகர்வோருக்கு எப்போதும் முதலிடம் அளித்து வருகிறோம். எனவே, எங்கள் வீடுகளில் அபிமானம் பெற்றுள்ள *Nescafé* மற்றும் *Maggi* ஆகிய வர்த்தகநாமங்கள் இரண்டு மக்கள் அபிமானம் பெற்ற விருதுகளைப் பெற்றுள்ளமை எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கின்றது. 115 வருடங்களுக்கும் மேலாக நாம் இலங்கையில் ஆழமாக வேரூன்றியுள்ளதுடன், எமது தயாரிப்புகள் இலங்கை நுகர்வோரின் மனங்களில் சிறப்பாக எதிரொலிப்பதை நாங்கள் பணிவன்புடன் ஏற்றுக் இருக்கிறோம். வளர்ந்து வரும் நுகர்வோர் தேவைகள் மற்றும் விருப்பங்களைப் புரிந்து கொள்ளும் நிறுவனமாகத் திகழ்வதில் நாங்கள் பெருமை கொள்கிறோம். ஆரோக்கியமான மற்றும் சுவையான உணவு மற்றும் பான வகை தெரிவுகளை வழங்கும் எமது பயணத்தைத் தொடர்ந்து முன்னெடுப்பதன் மூலம், எதிர்வரும் காலங்களிலும் எமது இலங்கை நுகர்வோருக்கு போசணையளித்து அவர்களை மகிழ்விப்பதற்காக, 'நல்லுணவு, நல்வாழ்வு' என்ற எமது வாக்குறுதியை வழங்குவதற்கு நாங்கள் தொடர்ந்து முயற்சி செய்கிறோம்," என நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஜேசன் அவன்சென்யா அவர்கள் கருத்து தெரிவித்தார்.

தனித்துவமான வாசனை மற்றும் செழுமையான சுவைக்காக இலங்கையர்களால் நேசிக்கப்படும், *Nescafé* 100% தூய கோப்பி விதைகளின் நலச்செழுமையுடன் தயாரிக்கப்படுவதுடன், நாள் முழுவதும் நுகர்வோரை உற்சாகப்படுத்தி, புத்துணர்வளிக்கின்றது. *Maggi* நூடில்ஸ் 30 வருடங்களுக்கும் மேலாக இலங்கையில் இல்லங்களில் மிகவும் நேசிக்கப்படுகின்ற ஒரு வர்த்தகநாமமாகத் திகழ்ந்து வருகின்றது. மிகச் சிறந்த மூலப்பொருட்களைப் பயன்படுத்தி இலங்கையில் தயாரிக்கப்படும் *Maggi* நூடில்ஸ், விரிவான பல வகைகளைக் கொண்ட தயாரிப்புகளைக் கொண்டுள்ளதுடன், சமீபத்தில் மற்றுமொரு சுவை வடிவமாக *Maggi* Papare Spicy Chicken Flavour Noodles என்ற தயாரிப்பு அறிமுகப்படுத்தப்பட்டது.

SLIM-KANTAR People's Awards என்ற விருதுகள் நிகழ்வானது இலங்கையின் மிகவும் மதிப்புமிக்க விருது நிகழ்வுகளில் ஒன்றாகும். இது இலங்கை மக்களின் உள்ளங்களில் இடம்பிடித்த வர்த்தகநாமங்கள் மற்றும் தனிநபர் ஆளுமைகளை அங்கீகரிப்பதாக அமைந்துள்ளது. KANTAR முன்னெடுத்த நேர்காணல் மூலம் விருதுக்கு உரித்தானவர்கள் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றமை இதன் சிறப்பம்சமாகும்.

நெஸ்லே 115 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை மக்களின் வாழ்வில் ஒரு அங்கமாக இருந்து வருகிறது. 'அனைவருக்கும், இன்றும், எதிர்கால தலைமுறையினருக்கும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த உணவின் ஆற்றலை வெளிக்கொணருவது' என்ற அதன் நோக்கத்தினால் சிறப்பாக வழிநடாத்திச் செல்லப்பட்டு, நெஸ்லே தனது பல்வேறுபட்ட உணவு மற்றும் பான வகைகளின்

தயாரிப்பு வரிசை மூலம் இளமை முதல் முதுமை வரை தலைமுறை தலைமுறையாக நுகர்வோருக்கு அவற்றை வழங்கி வருகிறது.

---

**தொடர்புகளுக்கு:**

| | | | |
|---|---|---|---|
| நிறுவன பொது விவகாரங்கள் | தமித குலதுங்க | +94777915949 | Damitha.Kulatunga@lk.nestle.com |

**புகைப்படத்தில் இடம்பெற்றுள்ள காட்சிகள்:**

**Nescafé விருது:** இடமிருந்து வலமாக - **ஷம்ஷாத் மரிக்கார்**, சிரேஷ்ட முகாமையாளர், விநியோக மார்க்க வகை விற்பனை, நெஸ்லே லங்கா; **ருவான் வெலிகல**, துணைத் தலைமை அதிகாரி, பாலை மூலமாகக் கொண்ட தயாரிப்புக்கள், நெஸ்லே லங்கா; வழங்குபவர் - **இந்திக அமரசூரிய**, வர்த்தகநாம தலைமை அதிகாரி, மொபிடெல்; **அஞ்சனா இராமலிங்கம்**, வர்த்தகநாம முகாமையாளர், கோப்பி தயாரிப்பு வகை, நெஸ்லே லங்கா; **ரதினி டி கொஸ்தா**, உதவி துணைத் தலைமை அதிகாரி, தகவல் தொடர்பாடல், நெஸ்லே லங்கா; **சந்தன திஸாநாயக்க**, சிரேஷ்ட தயாரிப்பு வகை முகாமையாளர், மா வடிவிலான பான வகைகள், நெஸ்லே லங்கா; **மதுரங்க பெரேரா**, சிரேஷ்ட வர்த்தகநாம முகாமையாளர், Nestlé Professional

**Maggi விருது:** இடமிருந்து வலமாக - **இசுரு மங்களஜீவ**, உதவி முகாமையாளர், வர்த்தக அபிவிருத்தி, நெஸ்லே லங்கா; **மதுஷினி டி சில்வா**, உதவி முகாமையாளர், நுகர்வோர் ஈடுபாட்டு சேவைகள், நெஸ்லே லங்கா; **ஷம்ஷாத் மரிக்கார்**, சிரேஷ்ட முகாமையாளர், விநியோக மார்க்க வகை விற்பனை, நெஸ்லே லங்கா; வழங்குபவர் - **கயானி பெரேரா**, சந்தைப்படுத்தல் தலைமை அதிகாரி, INSEE Cement; **அக்ஷரீ கோயல்**, சிரேஷ்ட வர்த்தகநாம முகாமையாளர், நூடில்ஸ் வகை, நெஸ்லே லங்கா; **ரதினி டி கொஸ்தா**, உதவி துணைத் தலைமை அதிகாரி, தகவல் தொடர்பாடல், நெஸ்லே லங்கா; **விவேக் உபாத்யாய**, நுகர்வோர் மற்றும் வாடிக்கையாளர் நுண்ணறிவுத் துறை தலைமை அதிகாரி, நெஸ்லே லங்கா; **சுதர்சனன் அம்பிகைக்குமரன்**, சிரேஷ்ட முகாமையாளர் - தயாரிப்பு வகை மற்றும் உணவு, Nestlé Professional; **இந்திரிகா குடாஹெட்டி**, தயாரிப்பு வகை முகாமையாளர், உணவு, நெஸ்லே லங்கா; **அஜித் விக்கிரமநாயக்க**, சிரேஷ்ட முகாமையாளர், பான வகை தீர்வுகள், Nestlé Professional